# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2443/50 - 2025 ජූලි මස 03 වැන බ්‍රහස්පතින්දා - 2025.07.03

*2443/50 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்***

***64 (5) ஆம் பிரிவின் கீழ் வெற்றிடமொன்றை நிரப்புதல்***

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினால் பெயர் குறித்து, அரசியலமைப்பின் 99அ உறுப்புரையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட்ட **திரு. முஹம்மது சாலி நளீம் அவர்கள்** கேட்டு விலகியமையின் காரணமாக பத்தாவது பாராளுமன்றத்தின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென்று, 1988 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 6 வது பிரிவினால் திருத்தியமைக்கப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64(5) ஆம் பிரிவிற்கிணங்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டிருப்பதனாலும் ;

அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக அந்த அரசியற் கட்சியின் செயலாளருக்கு மேலே குறிப்பிடப்பட்ட பிரிவின் கீழ் தகைமையுடைய ஒருவரை பெயர் குறிப்பிடுமாறு தேர்தல் ஆணைக்குழுவினால் பணிக்கப்பட்டுள்ளமையினாலும்;

மேற்கூறப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கென **திரு. முகம்மது சரிவு அப்துல் வாஸித்** அவர்களை பெயர்குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும்;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பத்தொன்பதாம் திருத்தத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64(5) ஆம் பிரிவிற்கமைய நடவடிக்கை மேற்கொண்டு, மேற்குறித்த **திரு. முஹம்மது சாலி நளீம்** அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து கேட்டு விலகியமையின் காரணமாக ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காக **திரு. முகம்மது சரிவு அப்துல் வாஸித்** பத்தாவது பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரெனத் தேர்தல் ஆணைக்குழுவினால் இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க**
தவிசாளர்
தேர்தல் ஆணைக்குழு

**எம்.ஏ.பீ.சீ.பெரேரா**
உறுப்பினர்
தேர்தல் ஆணைக்குழு

**அமீர் பாயிஸ்**
உறுப்பினர்
தேர்தல் ஆணைக்குழு

**ஏ. சண்முகநாதன்**
உறுப்பினர்
தேர்தல் ஆணைக்குழு

பேராசிரியர் **லக்ஷ்மன் திசாநாயக்க**
உறுப்பினர்
தேர்தல் ஆணைக்குழு

தேர்தல் ஆணைக்குழு,
இராஜகிரிய,
*2025, யூலை 03.*


1A - G 44738 — 374 (2025/06)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*